கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் ருவாண்டா நாட்டு நீர்ப்பாசனப் பொறியாளர்களுக்கு கோயமுத்தூர் பம்ப் உற்பத்தி நிறுவனத்தில் பயிற்சி

இந்திய அரசாங்கம், ருவாண்டா அரசின் நீர்ப்பாசன பொறியாளர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மூலமாக ஒரு மாத காலத்திற்கு பயிற்சி கொடுத்தது. இந்தப் பயிற்சியின் ஒரு அங்கமாக துடியலூரில் உள்ள அக்வாசப் இஞ்சினீரிங் உற்பத்தி நிறுவனத்தில் ருவாண்டா அரசின் எட்டு பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது, அந்த அக்வாசப் இஞ்சினீரிங் நிறுவனமானது இந்தியாவிலேயேத் தலைசிறந்த ஒரு பம்ப் உற்பத்தி நிறுவனம் ஆகும், இந்த நிறுவனத்தில் இருந்து உலகின் பல நாடுகளுக்கு பம்புகள் ஏற்றுமதி ஆகிக் கொண்டு இருக்கிறது. இந்தப் பயிற்சியில் ருவாண்டா நாட்டு பொறியாளர்கள், வயல்வெளிகளின் தன்மைக்கு ஏற்றவாறு பம்புகளை தேர்வு செய்யும் முறைகள், பம்புகளின் திறன் மதிப்பீடுதல் மற்றும் அவற்றில் ஏற்படும் குறைகளைக் கண்டறிதல் போன்றவற்றை அறிந்து கொண்டார்கள். மேலும் நீர்ப்பாசனத்தைத் திட்டமிடும்போது எவ்வாறு சூரிய ஒளியைப் பயன்படுத்தி இயங்கும் பம்புகளைப் பயன்படுத்தி ஆற்றல் பயன்பாட்டை குறைவாக இருக்குமாறு அமைப்பது என்பதைத் தெரிந்து கொண்டார்கள் அக்வாசப் நிறுவனத்தின் உற்பத்திக் கூடத்தில் ரோபோக்களை பயன்படுத்தி தரமான பம்பு எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நேரடியாகப் பார்த்துத் தெரிந்துக் கொண்டார்கள். மேலும் உற்பத்திக் கூடத்தில் துல்லியமாக அளவீடுகள் செய்யும் முறைகள், ஆற்றல் கணக்கீடு முறைகளை எவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைப்படி செய்வது போன்றவற்றை அறிந்து கொண்டார்கள்.

இத்தப் பயிற்சியை அக்வாசப் இஞ்சினீரிங் நிறுவனத்தின் போக்கு வரத்து மேலாளர் திரு,வி,எ.சுரேஷ்குமார் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்திக் கொடுத்தார். ஏற்றுமதி மேலாளர் திரு.உமர் அவர்கள், அக்வாசப் இஞ்சினீரிங் நிறுவனத்தில் இருந்து எந்தெந்த நாடுகளுக்கு பம்புகள் ஏற்றுமதி நடக்கிறது என்றும் ஆப்ரிக்கா

நாடுகளில் எவ்வளவு ஏற்றுமதி நடக்கிறது என்பது பற்றியும் விரிவாக எடுத்து உரைத்தார்கள். பொது மேலாளர் திரு. திலீப் அவர்கள், அக்வாசப் இஞ்சினீரிங் நிறுவனத்தின் சிறப்பு அம்சங்களை எடுத்துரைத்தார். ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கிளையின் தலைவர் திரு. முருகேசன் அவர்களும், பம்பு வடிவமைப்பு பொறியாளர் திரு. பிரசாத் அவர்களும் ருவாண்டா பொறியாளர்களுக்கு ஒரு முழுமையான பயிற்சியை நல்கினர்.

இந்தப் பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமான நீர் மற்றும் புவிசார் மையத்தின் இயக்குநர் முனைவர் எஸ். பழனிவேலன் அவர்கள் உருவாக்கம் செய்தார். பேராசிரியர்கள் முனைவர் வீ.இரவிக்குமாரும், முனைவர் எஸ்.செல்வகுமாரும் ருவாண்டா நாட்டுப் பொறியாளர்களை ஒருங்கிணைத்து பம்பு உற்பத்தி வளாகத்தில் வழிநடத்தி ஒரு பயன் உள்ள பயிற்சியாக உருவாவதற்கான பணியைச் செய்தனர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*